TNNG020057102021

உதவி அமர்வு / தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நாகப்பட்டினம்.

**முன்னிலை. திரு. G. கிருஷ்ணன், பி.ஏ., எல்எல்.பி.,**

உதவி அமர்வு நீதிபதி/ தலைமை நீதித்துறை நடுவர், நாகப்பட்டினம்.

2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 04ம் தேதி வியாழக்கிழமை

(திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம்

வைகாசி மாதம் 21ம் நாள்)

**அமர்வு வழக்கு எண்.80/2021**

(நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், நாகப்பட்டினம்.

முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.08/2019)

| | | |
|---|---|---|
| 1 | குற்றமுறையீட்டாளர் பெயர் | அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>நாகப்பட்டினம் நகர காவல் நிலையம்<br>குற்ற எண்.308/2017. |
| 2 | எதிரிகள் | 1. ஆசிக் (எ) முகம்மது ஆசிக் ரகுமான்,<br>ஆ/வ. 19/2017, **(Died)**<br>த/பெ. ஷேக் ஆஸ்லி,<br>அலிமரைக்காயர் தெரு,<br>நாகப்பட்டினம்.<br><br>2. சாஹிப் (எ) முகம்மது சாஹித்,<br>ஆ/வ,20/2017, **(A3)**<br>த/பெ. அப்துல்காதர்,<br>நெ.3, கமாலயா பள்ளித்தெரு,<br>பக்கிர் அப்பர் சந்து,<br>நாகப்பட்டினம். |
| 3 | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | 1ம் எதிரி கடந்த 09.08.2017 ஆம் தேதி கைது செய்யப்பட்டுள்ளார். 3ம் எதிரி கைது செய்யப்படவில்லை. |
| 4 | எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 1ம் எதிரி மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் |

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.04 19:48:51 +0530

| | | |
|---|---|---|
| | | Crl.M.P.No.2299/2017ல், கடந்த 19.08.2017 ஆம் தேதி பிறப்பித்த பிணை உத்தரவுபடி கடந்த 21.08.2017 ஆம் தேதி பிணையில் சென்றுள்ளார். 3ம் எதிரி மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் Crl.M.P. No.2372/2017ல், கடந்த 23.08.2017 ஆம் தேதி வழங்கப்பட்ட முன்பிணை உத்தரவுபடி, கடந்த 30.08.2017 ஆம் தேதி மேற்படி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆஜராகி பிணையில் சென்றுள்ளார். |
| 5 | இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் மற்றும் முதன்மை பதிவேட்டு வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | கடந்த 08.11.2018 ஆம் தேதி நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம் நாகப்பட்டினத்தில் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, PRC.No.08/2019 ஆக கடந்த 06.03.2019 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. |
| 6 | அமர்வு நீதிமன்றம், நாகப்பட்டினத்திற்கு நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம் நாகப்பட்டினத்தில் இருந்து வழக்கு அனுப்பி வைக்கப்பட்ட உத்தரவு நாள் | 09.08.2021 |
| 7 | கு.வி.மு.ச. பிரிவு 228ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து எதிரிகளிடம் கேட்கப்பட்ட நாள் | 1ம் எதிரி கடந்த 04.01.2023 ஆம் தேதி இறந்துவிட்டார். அதனால் அவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் வனையப்படவில்லை. 3ம் எதிரிக்கு எதிராக கடந்த 02.06.2026 ஆம் தேதி குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது. |
| 8 | வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | இவ்வழக்கின் 3ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b) (2 எண்ணிக்கை), 323, 324 (2 எண்ணிக்கை)ன் கீழ். |
| 9 | 3ம் எதிரியின் கோரிக்கை | பொய் வழக்கு. குற்றவாளி இல்லை. |
| 10 | இவ்வழக்கில் குவிமுச. பிரிவு 317ன் கீழான மனுக்கள் | அரசுத்தரப்பில் நாகப்பட்டினம் நகர காவல் நிலையத்தில், தற்போதைய காவல் |

G KRISHNAN
Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.04 19:49:15 +0530

<table>
<tr><td></td><td>நீங்கலாக இதர தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மற்றும் அவைகள் மீதான உத்தரவு, அது சம்பந்தமான மேல் முறையீட்டு உத்தரவு</td><td colspan="3">ஆய்வாளர் திரு. நா. சுந்தர்ராஜன் என்பவரை அழைத்து அரசுத்தரப்பு சாட்சியாக விசாரணை செய்ய கடந்த 02.06.2026 ஆம் தேதி தாக்கல் செய்த மனு Crl.M.P.No.394/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு அன்றே அனுமதிக்கப்பட்டது. அதன் பேரில் மேல்முறையீடு எதுவும் இல்லை.</td></tr>
<tr><td rowspan="4">11</td><td rowspan="4">இவ்வழக்கில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் நாள் விபரம்</td><td>அரசு தரப்பு/ எதிரிகள் தரப்பு சாட்சிகள்</td><td>முதல் விசாரணை நாள்</td><td>குறுக்கு விசாரணை நாள்</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>02.06.2026</td><td>02.06.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>02.06.2026</td><td>02.06.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>02.06.2026</td><td>02.06.2026</td></tr>
<tr><td>12</td><td>நீதிமன்றத்தின் முடிவு</td><td colspan="3">முடிவில், இவ்வழக்கு 3ம் எதிரியை இதச பிரிவுகள் 294(b) (2 எண்ணிக்கை), 323, 324 (2 எண்ணிக்கை)ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>13</td><td>தீர்ப்புரை</td><td colspan="3">இவ்வழக்கு 3ம் எதிரியை இதச பிரிவுகள் 294(b) (2 எண்ணிக்கை), 323, 324 (2 எண்ணிக்கை)–ன் கீழான குற்றச்சாட்டுக்களில் இருந்து, குவிமுச. பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>14</td><td>வழக்கு சொத்து குறித்த உத்தரவு</td><td colspan="3">இவ்வழக்கு சம்பந்தமாக நாகப்பட்டினம் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் CP.No.268/2018 ஆக ஆஜர் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் CP.No.21/2025 ஆக எண்ணிடப்பட்ட, சுமார் 18 செ.மீ. நீளமுள்ள கத்தி ஒன்று (அதன் மரப்பிடி சுமார் 7 செ.மீ. அதன் இரும்பு பகுதி சுமார் 10 செ.மீ. இரும்பு பூண் சுமார் ஒரு செ.மீ.) மற்றும்</td></tr>
</table>

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.04 19:49:24 +0530

| | | |
|---|---|---|
| | | சுமார் 2 அடி நீளமுள்ள சவுக்கு கட்டை ஒன்று ஆகியவற்றை இவ்வழக்கிலிருந்து எதிரிகள் 1. வாசிம் அக்ரம் ஆ/வ.19/2017 (A2), 2. அப்துல்லா (எ) முகம்மது ஷேக் அப்துல்லா ஆ/வ.21/2017 (A4), 3. யாசிர் (எ) முகம்மது அசாருதீன், ஆ/வ.20/2017 (A6) ஆகியோர்களுக்காக பிரித்து கோப்பிடப்பட்டு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அமர்வு வழக்கு எண்.41/2026 என்ற வழக்கில் பின்னர் பகரப்படும் என உத்தரவிடப்பட்டுள்ளது. |

இந்த அமர்வு வழக்கு இந்நீதிமன்றம் முன்பாக இன்று 04.06.2026 ஆம் தேதி இறுதியான விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் குற்றத்துறை அரசு வழக்கறிஞர் திரு. S. சரவணன் அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.M. ஹுசைன் ஃபாரூக் மற்றும் திரு. S. R. ராஜசிங்காரவேலன் ஆகியோர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இவ்வழக்கு சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில், இன்றே இந்நீதிமன்றம் இறுதியாக வழங்கிடும் ...

## தீர்ப்புரை

நாகப்பட்டினம் நகர காவல் நிலைய காவல் ஆய்வாளர், இவ்வழக்கின் இறந்துபோன 1ம் எதிரி ஆசிக் (எ) முகம்மது ஆசிக் ரகுமான் ஆ/வ.19/2017, த/பெ. ஷேக் அஸ்லின் என்பவர் இதச பிரிவுகள் 147, 148, 294(b), 324, 307ன் கீழும், இவ்வழக்கின் மற்றொரு எதிரியான 3ம் எதிரி சாபித் (எ) முகம்மது சாஹித், ஆ/வ.20/2017, த/பெ. அப்துல் காதர் உள்ளிட்ட இதர

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.06.04 19:49:46 +0530

எதிரிகளான வாசிம் அக்ரம், ஆ/வ.19/2017, த/பெ. ஹாஜா நஜுமுதீன் (A2), அப்துல்லா (எ) முகம்மது ஷேக் அப்துல்லா, ஆ/வ.21/2017, த/பெ. அப்துல் மஜீத் (A4), அபுதாஹிர் (எ) முகம்மது அபுதாஹிர், ஆ/வ.21/2017, த/பெ. சுல்தான் அப்துல்காதர் (A5) மற்றும் யாசர் (எ) முகம்மது அசாருதீன், ஆ/வ.20/2017, த/பெ. ஹனிபா (A6) ஆகியோர்கள் இதச பிரிவுகள் 147, 148, 294(b)ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக சொல்லி, நாகப்பட்டினம் நகர காவல் நிலைய குற்ற எண்.308/2017 என்ற வழக்கில், குற்ற அறிக்கையினை கடந்த 08.11.2018 ஆம் தேதி, நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், நாகப்பட்டினத்தில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி நீதிமன்றத்தில், மேற்படி வழக்கு PRC No.08/2019 ஆக கடந்த 06.03.2019 ஆம் தேதி மேற்படி 6 எதிரிகளுக்கு எதிராக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. கடந்த 09.08.2021 ஆம் தேதி மேற்படி நீதித்துறை நடுவரின் உத்தரவுபடி, விசாரணைக்காக மேற்படி 6 எதிரிகளுக்கு எதிராக, இவ்வழக்கு மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அங்கு அமர்வு வழக்கு எண்.80/2021 ஆக இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 27.08.2021 ஆம் தேதிய உத்தரவுப்படி, மேற்படி 6 எதிரிகளுக்கான விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இவ்வழக்கு கோப்பு இந்நீதிமன்றத்தால் கடந்த 02.09.2021 ஆம் தேதி பெறப்பட்டது.

2. நாகப்பட்டினம் நகர காவல் நிலைய குற்ற எண்.308/2017ல், இவ்வழக்கின் நிகழ்நிலைப் புகார்தாரர் திரு. பிரவீன்குமார் மற்றும் அவரது நண்பரான சாட்சி 2 திரு. அசார் ஆகியோர்களுக்கும், மேற்படி 6 எதிரிகளுக்கும், கடந்த 2016 ஆம் வருடம் சந்தனகூடு விழாவின்போது,

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.04 19:49:53 +0530

டான்ஸ் ஆடியதில் ஏற்பட்ட முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு, கடந்த 08.08.2017 ஆம் தேதி இரவு, சாட்சி 2 ஆன மேற்படி அசார் பள்ளிதொட்டிப் பந்தல்தெரு வழியாக வந்தபோது, அங்கு உட்கார்ந்திருந்த மேற்படி எதிரிகள் 6 பேரும், அவரின் இடது கன்னத்தில் அடித்து, சொற்பகாயத்தை ஏற்படுத்தி உள்ளனர். மேற்படி சாட்சி அசாரினை குச்சிகாரி மகனே என்று பொது இடத்தில் வைத்து காமக்குரோதமாக திட்டி, அருவெருப்பை ஏற்படுத்தி உள்ளார். இவ்வழக்கின் நிகழ்நிலைப் புகார்தாரர் பிரவீன்குமார் அவரது  நண்பர்களான மணிவண்ணன், ஆனந்த், பிரதீப் என்கிற பிரியதர்ஷன், ரஞ்சித் ஆகியோர்களுடன் ரயிலடி தெருவில் நின்று பேசிக்கொண்டிருந்துள்ளார். அப்போது, மேற்படி சம்பவம் குறித்து, மேற்படி சாட்சி 2 ஆன திரு. அசார், நிகழ்நிலைப் புகார்தாரர் பிரவீன்குமாரிடம் சொன்னதால், அதை கேட்பதற்காக மேற்படி பிரவீன்குமார் தனது நண்பர்களுடன் அன்று இரவு 10.00 மணியளவில், யாகுர் உசைன் பந்தல்தொட்டி தெரு அருகில் வந்து, ஏன்டா என் நண்பர் அசாரை அடித்தீர்கள் ? என்று மேற்படி எதிரிகள் 6 பேரிடமும் கேட்டுள்ளார். அப்போது இவ்வழக்கில் இறந்துபோன மேற்படி 1ம் எதிரி, தன் கையில் வைத்திருந்த கத்தியால் நிகழ்நிலைப் புகார்தாரர் பிரவீன்குமாரைப் பார்த்து இத்தோடு ஒழிந்துபோடா தேவடியா மகனே என சொல்லி, அவரது இடது கண் புருவத்திலும், இடது கை மணிக்கட்டிலும் குத்தி ரத்தக்காயத்தை ஏற்படுத்தியுள்ளார். மேற்படி 2ம் எதிரி வாசிம் அக்ரமும், இவ்வழக்கின் 3ம் எதிரியும் கட்டையால் மேற்படி நிகழ்நிலை புகார்தாரரின் உடம்பில் தாக்கல் சொற்ப காயத்தை ஏற்படுத்தியுள்ளனர். எனவே, இறந்துபோன இவ்வழக்கின் 1ம் எதிரி இதச பிரிவுகள் 147, 148, 294(b), 324, 307ன் கீழும், இவ்வழக்கின் 3ம் எதிரியும், இதர மேற்படி 4 எதிரிகளும் இதச பிரிவுகள் 147, 148, 294(b)ன் கீழும்தண்டிக்கத்தக்கவர்கள் என்று கூறப்பட்டுள்ளது.

G KRISHNAN
Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.04 19:50:08 +0530

3. மேற்படி எதிரிகள் 6 பேருக்கும் இவ்வழக்கு ஆவணங்கள் நகல்கள் அனைத்தும் குவிமுச.பிரிவு 207ன் கீழ் இலவசமாக நாகப்பட்டினம் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்திலேயே வழங்கப்பட்டுள்ளது. இந்த அமர்வு வழக்கு, மேற்படி எதிரிகள் 6 பேருக்கும் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் அமர்வு நீதிமன்றத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வந்தபோது, மேற்படி 1ம் எதிரி ஆசிக் (எ) முகம்மது ஆசிக் ரகுமான், கடந்த 04.01.2023 ஆம் தேதி இறந்துவிட்டார். அவரது இறப்பு சான்றின் நகலை அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டதன் அடிப்படையில், கடந்த 21.08.2025 ஆம் தேதி இந்நீதிமன்றத்தால் இவ்வழக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனால் அவருக்கு எதிரான இவ்வழக்கானது, குற்றச்சாட்டுக்கள் அற்றுவிட்டதாக (Charge Abated) என கடந்த 21.08.2025 ஆம் தேதிய உத்தரவுபடி இந்நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டுள்ளது.

4. இந்த வழக்கில் 5ம் எதிரி அபுதாஹிர் (எ) முகம்மது அபுதாஹிர் மட்டும் ஆஜராகி, இதர 4 எதிரிகள் ஆஜராகாமல், அவர்களுக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் பிணையில்விடா பிடியாணை பிறப்பிக்கப்பட்டு, இவ்வழக்கு நிலுவையில் இருந்தது. அதனால் மேற்படி 5ம் எதிரி அபுதாஹிர் (எ) முகம்மது அபுதாஹிர் என்பவருக்கான வழக்கு, இந்த அமர்வு வழக்கிலிருந்து பிரித்து நடத்த, Crl.M.P.No.1437/2024ல் கடந்த 27.08.2024 ஆம் தேதி இந்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. அதனடிப்படையில், மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் அமர்வு நீதிமன்றம், மேற்படி 5ம் எதிரிக்கு எதிரான வழக்கானது இந்த அமர்வு வழக்கிலிருந்து, அமர்வு

G KRISHNAN
Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.04 19:50:14 +0530

வழக்கு எண்.114/2025 (SC. No.114/2025) ஆக கடந்த 25.08.2025 ஆம் தேதி பிரித்து கோப்பிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இந்த வழக்கில், இந்த 3ம் எதிரி சாபித் (எ) முகம்மது சாஹித் ஆஜராகி, தனக்கு எதிராகவும் வழக்கை பிரித்து நடத்தித்தர வேண்டி, குவிமுச.பிரிவு 317(2)ன் கீழ் தாக்கல் செய்த மனுவானது கடந்த 20.05.2026 ஆம் தேதியன்றே Crl.M.P. No.02/2026 ஆக இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டது. மேற்படி மனு கடந்த 21.05.2026 ஆம் தேதி இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது. அதனடிப்படையில், இந்த அமர்வு வழக்கு, மேற்படி 3ம் எதிரிக்கு எதிராக தொடர்ந்து நடத்தவும், மேற்படி 2ம் எதிரி வாசிம் அக்ரம், 4ம் எதிரி அப்துல்லா (எ) முகம்மது ஷேக் அப்துல்லா, 6ம் எதிரி யாசர் (எ) முகம்மது அசாருதீன் ஆகியோர்களுக்கு எதிராக, இவ்வழக்கினை பிரித்து நடத்தவும் இந்நீதிமன்றம் உத்தரவிட்டது. அதனடிப்படையில், மேற்படி 2, 4 மற்றும் 6 ஆகிய எதிரிகளுக்கு எதிராக இந்த அமர்வு வழக்கிலிருந்து, அமர்வு வழக்கு எண்.41/2026 ஆக மாண்புமிகு நாகப்பட்டினம், மாவட்டம் மற்றும் அமர்வு நீதிமன்றம் கடந்த 02.06.2026 ஆம் தேதி பிரித்து கோப்பிட்டு அனுப்பி வைத்துள்ளது.

5. அதனைத் தொடர்ந்து, ஆஜரான இந்த 3ம் எதிரியிடம், இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதை இந்நீதிமன்றம் உறுதி செய்துகொண்டது. பின்னர் அரசு தரப்பு வழக்கறிஞர் மூலம் இவ்வழக்குப் பற்றிய விபரமும், மேற்படி 3ம் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களும் கேட்டறியப்பட்டது. பின்னர் இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அதனடிப்படையில், கடந்த 02.06.2026 ஆம் தேதி, இவ்வழக்கு எதிரி மீது இதச பிரிவுகள் 294(b) (2 எண்ணிக்கை), 323, 324 (2 எண்ணிக்கை)ன் கீழ் குற்றச்சாட்டுக்கள்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.04 19:50:21 +0530

வனைந்து வினாவ போதிய முதல்தோற்ற ஆதாரங்கள் இருந்தமையால், அவ்வாறே குற்றச்சாட்டுக்கள் வனைந்து தமிழில் எடுத்துக்கூறி விளக்கி வினாவப்பட்டது. அப்போது இவ்வழக்கின் 3ம் எதிரி, மேற்படி குற்றச்சாட்டுக்களை மறுத்து, குற்றவாளி இல்லையென சொல்லி, பொய் வழக்கு என கூறி வழக்கு விசாரணைக்கு வேண்டினார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

6. இவ்வழக்கில், அரசு தரப்பில் அ.சா.1 முதல் 3 சாட்சியங்களை முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டு, அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் 9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. **அரசு தரப்பில் சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் முன்வைக்கப்பட்ட வழக்கின் சுருக்கம் பின்வருமாறு :**

7 (1). அசா.1 திரு. பிரவீன்குமார் மற்றும் அவரது நண்பரான பட்டியல் சாட்சி 2 திரு. அசார் ஆகியோர்களுக்கும், இவ்வழக்கில் இறந்துபோன 1ம் எதிரி ஆசிக் (எ) முகம்மது ஆசிக் ரகுமான், இந்த 3ம் எதிரி உள்ளிட்ட இதர எதிரிகளான வாசிம் அக்ரம், அப்துல்லா (எ) முகம்மது ஷேக் அப்துல்லா, அபுதாஹிர் (எ) முகம்மது அபுதாஹிர், யாசர் (எ) முகம்மது அசாருதீன் ஆகியோர்களுக்கும், கடந்த 2016 ஆம் வருடம் சந்தனகூடு விழாவின்போது, டான்ஸ் ஆடியதில் பிரச்சனை இருந்து வந்தது. அந்த முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு, கடந்த 08.08.2017 ஆம் தேதி இரவு, பட்டியல் சாட்சி 2 ஆன மேற்படி அசார் பள்ளிதொட்டிப் பந்தல்தெரு வழியாக வந்தபோது, அங்கு உட்கார்ந்திருந்த மேற்படி எதிரிகள் 6 பேரும், அவரின் இடது கன்னத்தில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியுள்ளனர். மேலும் அவரை பிறர் அருவருக்கும்படியான தகாத

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.04 19:50:28 +0530

வார்த்தைகளால் பேசியுள்ளனர். அன்று இரவு அசா.1 திரு. பிரவீன்குமார், தனது நண்பர்களான மணிவண்ணன், ஆனந்த், பிரதீப் (எ) பிரியதர்ஷன், ரஞ்சித் ஆகியோர்களுடன் ரயிலடி தெருவில் நின்று பேசிக்கொண்டிருந்துள்ளார். அப்போது, மேற்படி சம்பவம் குறித்து, மேற்படி சாட்சி 2 ஆன திரு.அசார், அசா.1றிடம் சொன்னதால், அதை கேட்பதற்காக அசா.1, தனது நண்பர்களுடன் அன்று இரவு 10.00 மணியளவில், யாகுர் உசைன் பந்தல்தொட்டி தெரு அருகில் வந்து, ஏன்டா என் நண்பர் அசாரை அடித்தீர்கள் ? என்று, மேற்படி எதிரிகள் 6 பேரிடமும் கேட்டுள்ளார். அப்போது இவ்வழக்கில் இறந்துபோன மேற்படி 1ம் எதிரி, தன் கையில் வைத்திருந்த கத்தியால் அசா.1றைப் பார்த்து, இத்தோடு ஒழிந்துபோடா தேவடியா மகனே என சொல்லி, அவரது இடது கண் புருவத்திலும், இடது கை மணிக்கட்டிலும் குத்தி ரத்தக்காயத்தை ஏற்படுத்தியுள்ளார். மேற்படி எதிரி வாசிம் அக்ரமும், இவ்வழக்கின் 3ம் எதிரியும் கட்டையால் அசா.1றின் உடம்பில் தாக்கி சொற்ப காயத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்.

7 (2). இந்த சம்பவத்தில் காயம்பட்ட அசா.1, மேற்படி சாட்சி 2 ஆன அசாரை நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளனர். கடந்த 09.08.2017 ஆம் தேதி காலை 08.00 மணியளவில், நாகப்பட்டினம் நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக திரு. ஜி. கே. மூர்த்தி என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது, அசா.1 காயமுற்று நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ளார் என்ற தகவலை, மேற்படி மருத்துவமனையிலிருந்து பெற்றுள்ளார். அவரே மேற்படி மருத்துவமனைக்கு சென்று, அசா.1றை விசாரணை செய்து அசாஆ.2 ஆன புகார் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். பின்னர் நிலையம் வந்து, மேற்படி புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில்,

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.04 19:50:36 +0530

நாகப்பட்டினம் நகர காவல் நிலைய குற்ற எண்.308/2017 இதச பிரிவுகள் 147, 148, 294(b), 324, 307ன் கீழ் அசாஆ.3 ஆன முதல் தகவல் அறிக்கையை மேற்படி உதவி ஆய்வாளரே பதிவு செய்துள்ளார். மேற்படி புகார் வாக்குமூலத்தையும், முதல் தகவல் அறிக்கையின் அசலையும், நாகப்பட்டினம் நீதித்துறை நடுவர் எண்.1, நீதிமன்றத்திற்கு மேற்படி உதவி ஆய்வாளர் அனுப்பி வைத்துள்ளார். வழக்கு கோப்பினை மேற்படி காவல் நிலைய ஆய்வாளராக பணியிலிருந்த திரு. செந்தில்குமார் என்பவரிடம் புலன் விசாரணைக்காக மேற்படி உதவி ஆய்வாளர் ஒப்படைத்துள்ளார்.

7 (3). மேற்படி காவல் ஆய்வாளர் இவ்வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்டு, கடந்த 09.08.2017 ஆம் தேதி காலை 08.45 மணியளவில், சம்பவ இடம் சென்று அங்கிருந்த சாட்சிகளான ரகமத்துல்லா, முத்துக்குமார் ஆகியோர் முன்னிலையில், சம்பவ இடத்தை பார்வையிட்டு, அசாஆ.4 ஆன பார்வை மகசர் மற்றும் அசாஆ.5 ஆன மாதிரி வரைபடத்தினை தயார் செய்துள்ளார். பார்வை மகசரில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

7 (4). கடந்த 09.08.2017 ஆம் தேதியன்றே காலை 10.00 மணியளவில், நாகப்பட்டினம் பேய்குளம் அருகில் நின்றிருந்த, இவ்வழக்கின் இறந்துபோன 1ம் எதிரி ஆசிக் (எ) முகம்மது ஆசிக் ரகுமான், இதர எதிரியான 2ம் எதிரி வாசிம் அக்ரம் ஆகிய இரண்டு எதிரிகளையும் காரணங்கள் கூறி மேற்படி காவல் ஆய்வாளர் கைது செய்துள்ளார். அப்போது மேற்படி இறந்துபோன 1ம் எதிரி ஆசிக் (எ) முகம்மது ஆசிக் ரகுமான் தன்னிச்சையாக இவ்வழக்கின் குற்றத்தை ஒப்புக்கொண்டு

G KRISHNAN
Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.04 19:51:01 +0530

அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை, சாட்சிகள் பாலகிருஷ்ணன், ஷேக் அலாவுதீன் ஆகியோர் முன்னிலையில் மேற்படி காவல் ஆய்வாளர் பதிவு செய்துள்ளார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், மேற்படி இறந்துபோன 1ம் எதிரி, மேற்படி சாட்சிகளையும், மேற்படி காவல் ஆய்வாளரையும் தனது வீட்டிடம் அழைத்துச் சென்று, வீட்டின் பின்புறம் இருந்து ஒரு இரும்பு கத்தி ஒன்றையும், ஒரு சவுக்கு கட்டை ஒன்றையும் எடுத்து ஆஜர் செய்துள்ளார். அவைகளை மேற்படி சாட்சிகள் முன்னிலையில், அன்று பகல் 11.00 மணியளவில், மேற்படி காவல் ஆய்வாளர் அசாஆ.6 ஆன கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றியுள்ளார். பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துக்களையும், மேற்படி எதிரிகளையும் நிலையம் கொண்டுவந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். கைப்பற்றப்பட்ட மேற்படி வழக்குச் சொத்துக்களை, அசாஆ.7 ஆன படிவம் 91னின் மூலம் நீதிமன்றத்தில் மேற்படி காவல் ஆய்வாளர் ஆஜர் செய்துள்ளார்.

7 (5). மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளை மேற்படி காவல் ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட அசா.1 மற்றும் மேற்படி பட்டியல் சாட்சி 2 ஆன திரு. அசார் ஆகியோர்களை, மேற்படி காவல் ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அசா.1க்கு சிகிச்சை அளித்த நாகப்பட்டினம் அரசு மருத்துவமனை மருத்துவர் சிவசங்கரி என்பவரை, மேற்படி காவல் ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அப்போது மேற்படி மருத்துவர், மேற்படி அசா.1க்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என கருத்து தெரிவித்து வழங்கிய, அசாஆ.9 ஆன காயம் குறித்த கருத்துரை ஆவணம் மற்றும் அசாஆ.8

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.06.04 19:51:11 +0530

ஆன விபத்து பதிவேட்டு ஆவணத்தை மேற்படி காவல் ஆய்வாளர் பெற்றுள்ளார். வழக்கின் புலன் விசாரணை முடித்து, எதிரி மீது இவ்வழக்கின் குற்ற அறிக்கையை மேற்படி காவல் ஆய்வாளரே தாக்கல் செய்துள்ளார்.

7 (6). இவ்வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்டதாகவும், அசாஆ.1 ஆன புகார் வாக்குமூலத்தை கொடுத்ததாகவும் சொல்லி, அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.1 திரு. பிரவீன்குமாருக்கு இவ்வழக்கின் 3ம் எதிரியை யார் என்று தெரியாது. இந்த சம்பவம் குறித்தும் அவருக்கு எதுவும் தெரியாது. கடந்த 08.08.2017 ஆம் தேதி தொட்டிப்பந்தல் அருகில் இருந்த கூட்டத்தில் பிரச்சனை ஏற்பட்டது. அதை விலக்கச்சென்ற அசா.1க்கு காயம் ஏற்பட்டது. மேற்படி சம்பவம் நடக்கும்போது, இரவு 10.00 மணியிருக்கும். அதனால் கூட்டத்தில் அசா.1க்கு எப்படி அடிபட்டது ? என்று அசா.1க்கே தெரியாது. மேலும் அந்த கூட்டத்தில் யார் யாருக்கு பிரச்சனை நடந்தது ? என்றும் அசா.1க்கு தெரியாது. அசா.1 மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது, போலிசார் அவரிடம் அசாஆ.2 ஆன புகார் வாக்குமூலத்தில் உள்ள அசாஆ.1 ஆன கையெழுத்தினை வாங்கினார்கள். ஆனால், அதில் உள்ள விவரம் எதுவும் அசா.1க்கு தெரியாது. அசா.1றை போலிசார் விசாரிக்கவில்லை. சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லி, அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.2 திரு. லோகநாதனுக்கும், இவ்வழக்கின் 3ம் எதிரியை யார் என்று தெரியாது. இவ்வழக்கு சம்பவம் பற்றியும் அசா.2க்கு எதுவும் தெரியாது. போலிசார் அவரையும் விசாரிக்கவில்லை. மேற்சொல்லப்பட்டவாறு, அசா.1 மற்றும் 2 அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்ததால், அசா.1 மற்றும் 2டினை

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.04 19:51:19 +0530

அரசுத்தரப்பில் பிறழ்சாட்சிகளாக அனுமதிக்கக் கோரப்பட்டது. அவ்வாறே அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில், அசா.1 மற்றும் 2டினை அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.

7 (7). இந்த வழக்கில் புலன் விசாரணை சம்பந்தமாக, ஆவணங்களை பார்த்து சாட்சியமளிக்க, நாகப்பட்டினம் நகர காவல் நிலையத்தின் தற்போதைய காவல் ஆய்வாளரான திரு. நா. சுந்தர்ராஜன் அவர்களை அழைத்து விசாரணை செய்ய, அரசுத்தரப்பில் குவிமுச.பிரிவு 311ன் கீழான மனு கடந்த 02.06.2026 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி மனு அன்றே Crl.M.P.No.394/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது. அதனடிப்படையில், மேற்படி காவல் ஆய்வாளர் திரு. நா. சுந்தர்ராஜனை அழைத்து அரசுத்தரப்பில் அசா.3 ஆக முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டது. அவர் மூலம்தான் அசாஆ.2 முதல் 9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. இத்துடன் அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளில், இவ்வழக்கின் 3ம் எதிரிக்கு பாதகமாக அளிக்கப்பட்ட, சாட்சிகளின் சாட்சியங்கள் குறித்து, இன்று 04.06.2026 ஆம் தேதி குவிமுச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ், இவ்வழக்கின் 3ம் எதிரியிடம் எடுத்துக்கூறி விளக்கி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அப்போது இவ்வழக்கின் 3ம் எதிரி **"தனக்கு எதிராக கூறப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் பொய், தன் மீது போடப்பட்ட இந்த வழக்கு பொய் வழக்கு. தனது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை"** என தெரிவித்தார். எனவே

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.06.04 19:51:28 +0530

இவ்வழக்கின் 3ம் எதிரி தரப்பு சாட்சிய விசாரணை இல்லையென முடிக்கப்பட்டது. இவ்வழக்கின் 3ம் எதிரி தரப்பில் எந்தவித சாட்சிய, சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருள்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை.

9. தற்போது தீர்வுக்குரிய விபரம் யாதெனில், இவ்வழக்கின் 3ம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களானது, அரசு தரப்பால் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதே ஆகும்.

**10. <u>தீர்வு :-</u>**

10 (1). இவ்வழக்கின் 3ம் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்க அரசுத்தரப்பில் மொத்தம் 3 சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டுள்ளது. அவர்கள் மூலம் அரசுத்தரப்பில் அசாஆ.1 முதல் 9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் அரசுத்தரப்பு வழக்குப்படி, அசா.1 இவ்வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட, பாதிக்கப்பட்ட நபர் மற்றும் அசாஆ.2 ஆன இவ்வழக்கின் புகார் வாக்குமூலத்தை கொடுத்தவர். அசா.2 இவ்வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி. அசா.3 ஆன காவல் ஆய்வாளர், இவ்வழக்கின் புலன் விசாரணை சம்பந்தமாக ஆவணங்களைப் பார்த்து சாட்சியமளித்தவர் ஆவார்.

10 (2). மேற்படி சாட்சிகளில், இவ்வழக்கின் முக்கிய சாட்சியான அசா.1றே, தனது நண்பரான பட்டியல் சாட்சி 2 அசாரை, இவ்வழக்கின் 3ம் எதிரி உள்ளிட்ட, இதர எதிரிகள் தகாத வார்த்தைகளால் பேசி அடித்துக்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.06.04 19:51:36 +0530

காயப்படுத்தியது சம்பந்தமாக, நான் போய் கேட்டதால் என்னையும், தகாத வார்த்தைகளால் பேசி இவ்வழக்கின் எதிரி அடித்து காயப்படுத்தினார் என அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. மாறாக, தனக்கு இவ்வழக்கின் எதிரியை தெரியாது. இவ்வழக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது. கடந்த 08.08.2017 ஆம் தேதி தொட்டிப்பந்தல் அருகில் கூட்டமாக பிரச்சனை நடந்தது. அதில் விலக்கச்சென்ற எனக்கு காயம் ஏற்பட்டது. சம்பவம் நடக்கும்போது இரவு 10.00 மணியிருக்கும். கூட்டத்தில் எப்படி அடிபட்டது ? என்று எனக்கு தெரியாது. யார் யாருக்கு பிரச்சனை நடந்தது ? என்றும் எனக்கு தெரியாது என அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார்.

10 (3). மேலும் அசா.1, அசாஆ.2 ஆன இவ்வழக்கின் புகாரினை நான்தான் அளித்தேன் எனவும், அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கவில்லை. மாறாக, நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபொழுது, போலிசார் என்னிடம் வந்து கையெழுத்து வாங்கினார்கள். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது ? என்று எனக்கு தெரியாது. அசாஆ.2 ஆன புகார் வாக்குமூலத்தில் உள்ள அசாஆ.1 ஆன கையெழுத்து என்னுடையதுதான். போலிசார் என்னை விசாரிக்கவே இல்லை என அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார்.

10 (4). சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லி, அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.2ம், அசா.1 எனக்கு தம்பி முறைதான். ஆனால் எனக்கு இவ்வழக்கின் 3ம் எதிரியை யார் என்று தெரியாது. இவ்வழக்கு சம்பவம் பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.04 19:51:44 +0530

போலிசார் என்னை விசாரிக்கவில்லை என அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார்.

10 (5). பட்டியல் சாட்சி 2 ஆன அசார் என்பவரை இவ்வழக்கின் 3ம் எதிரி உள்ளிட்ட, இதர எதிரிகள் தகாத வார்த்தைகளால் பேசி அடித்ததாகவும், அதைக் கேட்கச்சென்ற அசா.1றைத்தான் இறந்துபோன 1ம் எதிரி கொலை செய்ய முயன்றதாகவும், இந்த 3ம் எதிரி உள்ளிட்ட இதர எதிரிகள் அடித்துக் காயப்படுத்தியதாகவும் அரசுத்தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அதை உறுதிப்படுத்த, மேற்படி பட்டியல் சாட்சி அசாரையே அரசுத்தரப்பில் சாட்சியாக முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்படவில்லை. சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லப்படும் இதர சாட்சிகளையும், அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்படவில்லை. அசா.1 மற்றும் மேற்படி அசாருக்கு சிகிச்சை அளித்ததாக சொல்லப்படும் மருத்துவர்களையும் அரசுத்தரப்பில் சாட்சிகளாக முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்படவில்லை. இவ்வழக்கின் புகார் வாக்குமூலத்தைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக சொல்லப்படும் உதவி ஆய்வாளரையும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளரையும், அரசுத்தரப்பில் சாட்சிகளாக முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்படவில்லை.

10 (6). இந்நிலையில், வெறும் வழக்கு ஆவணங்களை மட்டும் பார்த்து அளித்த அசா.3றின் சாட்சியத்தையும், அவர் மூலம் குறியீடு செய்யப்பட்ட, அசாஆ.2 முதல் 9 வரையிலான சான்றாவணங்களையும் மட்டும் வைத்து, இந்த 3ம் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களானது, அரசுத்தரப்பால் நிரூபணம் செய்யப்பட்டுவிட்டது என்று கூற இயலாது. மேற்கண்ட

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.04 19:51:54 +0530

அரசுத்தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள், அரசுத்தரப்பு செயல்பாடு மற்றும் மேற்கண்ட வழக்கு சூழ்நிலை ஆகியவைகளை பார்க்கின்றபோது, அரசுத்தரப்பில் சொல்லப்பட்டதுபோல, இவ்வழக்கு சம்பவம் நடைபெற்றதா ? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. எனவே, இந்த 3ம் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களானது அரசு தரப்பால் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

**11. முடிவில்,**

**இந்த 3ம் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களானது, அரசு தரப்பால் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்வு காணப்பட்டிருப்பதால், சந்தேகத்தின் பலனை இந்த 3ம் எதிரிக்கு அளித்து, இவ்வழக்கின் 3ம் எதிரியை, இதச பிரிவுகள் 294(b) (2 எண்ணிக்கை), 323, 324 (2 எண்ணிக்கை)ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்படுகிறது. எனவே, இவ்வழக்கின் 3ம் எதிரியை இதச பிரிவுகள் 294(b) (2 எண்ணிக்கை), 323, 324 (2 எண்ணிக்கை)ன் கீழான குற்றச்சாட்டுக்களில் இருந்து, கு.வி.மு.ச. பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**12.** இந்த 3ம் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணையப்பத்திரமானது மேல்முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர், தானே ரத்தாகும் என இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.04 19:52:01 +0530

**13. இவ்வழக்கு சம்பந்தமாக நாகப்பட்டினம் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் CP.No.268/2018 ஆக ஆஜர் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் CP.No.21/2025 ஆக எண்ணிடப்பட்ட, சுமார் 18 செ.மீ. நீளமுள்ள கத்தி ஒன்று (அதன் மரப்பிடி சுமார் 7 செ.மீ. அதன் இரும்பு பகுதி சுமார் 10 செ.மீ. இரும்பு பூண் சுமார் ஒரு செ.மீ.) மற்றும் சுமார் 2 அடி நீளமுள்ள சவுக்கு கட்டை ஒன்று ஆகியவற்றை, இவ்வழக்கிலிருந்து எதிரிகள் 1. வாசிம் அக்ரம் ஆ/வ.19/2017 (A2), 2. அப்துல்லா (எ) முகம்மது ஷேக் அப்துல்லா ஆ/வ.21/2017 (A4), 3. யாசிர் (எ) முகம்மது அசாருதீன், ஆ/வ.20/2017 (A6) ஆகியோர்களுக்காக பிரித்து கோப்பிடப்பட்டு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அமர்வு வழக்கு எண்.41/2026 என்ற வழக்கில் பின்னர் பகரப்படும் என இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜூன் மாதம் 04 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.06.04 19:52:11 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**
**(தலைமை நீதித்துறை நடுவர்),**
**நாகப்பட்டினம்.**

**இணைப்பு** –

**சாட்சியப்பட்டியல்**

**அரசு தரப்பு சாட்சிகள்** :–

| **வ.எண்.** | **சாட்சிகளின் பெயர்** |
|---|---|
| அ.சா.1 | திரு.  பிரவீன்குமார். |
| அ.சா.2 | திரு. லோகநாதன். |
| அ.சா.3 | திரு. நா. சுந்தர்ராஜன் (காவல் ஆய்வாளர்) |

**3ம் எதிரி தரப்பு சாட்சிகள் :–** இல்லை.

**சான்றாவணப்பட்டியல்:**

**அரசு தரப்பு சான்றாவணங்கள்** :–

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | –– | புகார் வாக்குமூலத்தில் உள்ள அசா.1றின் கையெழுத்து மட்டும் – அசல் |
| அ.சா.ஆ.2 | –– | புகார் வாக்குமூலம் – அசல். |
| அ.சா.ஆ.3 | 09.08.2017 | முதல் தகவல் அறிக்கை – அசல் |
| அ.சா.ஆ.4 | 09.08.2017 | பார்வை மகசர் – அசல் |
| அ.சா.ஆ.5 | –– | மாதிரி வரைபடம் – அசல். |
| அ.சா.ஆ.6 | 09.08.2017 | கைப்பற்றுதல் மகசர் – நகல். |
| அ.சா.ஆ.7 | 09.08.2017 | படிவம் 91  – அசல் |
| அ.சா.ஆ.8 | 08.08.2017 | அசா.1 பிரவீன்குமார் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்ததற்காக வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டு ஆவணம் – அசல். |

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.04 19:52:18 +0530

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.9 | 18.08.2017 | அசா.1 பிரவீன்குமாருக்கு ஏற்பட்ட காயம் குறித்து நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட காயம் குறித்த கருத்துரை ஆவணம் – அசல். |

**3ம் எதிரி தரப்பு சான்றாவணங்கள் :–** –இல்லை.

**சான்றுப்பொருள் பட்டியல் :**

**அரசுத்தரப்பு சான்று பொருட்கள்:–** இல்லை.

**3ம் எதிரி தரப்பு சான்று பொருட்கள் :–** இல்லை.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.06.04 19:52:25 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**
**(தலைமை நீதித்துறை நடுவர்),**
**நாகப்பட்டினம்.**

**குறிப்பு**

1. இறந்துபோன 1ம் எதிரி பிணையிலிருந்து ஆஜரானார். இந்த 3ம் எதிரி முன்பிணை உத்தரவுபடி ஆஜரானார்.
2. சாட்சிகள் யாரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.
3. இவ்வழக்கின் 1ம் எதிரி, இவ்வழக்கு நிலுவையில் இருந்தபொழுது இறந்துவிட்டதால், அவருக்கு எதிரான இவ்வழக்கானது குற்றச்சாட்டுக்கள் அற்றுவிட்டதாக கடந்த 21.08.2025 ஆம் தேதி முடிக்கப்பட்டுள்ளது. இந்த 3ம் எதிரியை குற்றவாளி இல்லை என தீர்மானித்து விடுதலை செய்யப்பட்டது.
4. தீர்ப்புப் பற்றி சிறு குறிப்பு குற்ற முறையீட்டு காவல் நிலையத்தாருக்கு தெரிவிக்கப்பட்டது.
5. தீர்ப்பின் நகல் மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.
6. இந்த 3ம் எதிரிக்கு அபராதம் விதிக்கப்படவில்லை.
7. தீர்ப்பு நாள் – 04.06.2026.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.06.04 19:52:32 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**
**(தலைமை நீதித்துறை நடுவர்),**
**நாகப்பட்டினம்.**